सत्यमेव जयते

*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **05 மார்ச், 2025**

# பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சீராய்வுக் கூட்டம் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் தலைமையில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. புதுச்சேரி மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மீனவளத் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கபட்டது.

கூட்டத்தில், பெங்களூரை சேர்ந்த சி.ஐ.சி.இ.எஃப். (CICEF), மும்பையைச் சேர்ந்த எஃப்.எஸ்.ஐ (FSI) கொச்சியைச் சேர்ந்த சி.எம்.எஃப்.ஆர்.ஐ (CMFRI) ஐதராபத்தை சேர்ந்த இன்காய்ஸ் (INCOIS), கொச்சியைச் சேர்ந்த எம்பெடா (MPEDA) ஆகிய மத்திய அரசின் மீன்வள ஆராய்ச்சி மற்றும் மீன்வள மேம்பாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். மீன்வளத்துறைச் செயலர் டாக்டர் மணிகண்டன், இயக்குநர் திரு இஸ்மாயில் ஆகியோர் உடனிருந்தனர்.

மீன்வள மேம்பாடு, மீனவர்கள் நலம் குறித்து விவாதம் கூட்டத்தில் முக்கியத்துவம் பெற்றது. மீன் வளம் அதிகம் உள்ள இடங்களை கண்டறிவற்கான வழிமுறைகள், அதற்கான அடிப்படை தகவல்கள், பன்னாட்டு எல்லைகளை மீனவர்கள் அறிந்து கொள்வதற்கான வசதிகள் ஆகியவற்றை அதிகாரிகளிடம் துணைநிலை ஆளுநர் கேட்டறிந்தார். தற்போதைய சூழ்நிலையில், காரைக்கால் மீனவர்கள் பன்னாட்டு எல்லையை தாண்டி மீன்பிடிப்பதாக எழும் தொடர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான சாத்திய கூறுகள் பற்றி கேட்டறிந்தார்.

மேலும், புதுச்சேரியின் மீன்வளத்தை மேம்படுத்தவும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மத்திய அரசின் நிறுவனங்கள் முன்வைக்கும் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அந்தமான் பகுதியில் மீன்வளம் அதிகம் காணப்படுவதையும், இஸ்ரோ மூலமாக கிடைக்கும் செயற்கைக்கோள் தகவல்களை கொண்டு மீன்வளம் அதிகமாக இருக்கும் இடங்களை அடையாளம் காண்பது குறித்தும் ஐதராபாத் இன்காய்ஸ் நிறுவன அதிகாரிகள் விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து அதிகாரிகளுக்கு பின்வரும் ஆலோசனைகளை துணைநிலை ஆளுநர் வழங்கினார்.

- ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு தேவைப்படும் படகுகளை மீனவர்களுக்கு வழங்குவதற்கான நடைமுறைகளை விரிவுபடுத்த வேண்டும். அதற்கான வங்கி கடன் வசதிகள் மற்றும் மானியங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு முறையில் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை கவனிக்க வேண்டும். மத்திய கூட்டுறவு

அமைச்சகத்தின்கீழ் இயங்கும் என்.சி.டி.சி மூலமாக குறைந்த வட்டியில் பணம் பெறும் வாய்ப்புகளை மீனவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

- மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்கள் பாதுகாப்பான முறையில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவும் தேவையான வழிமுறைகளை ஆராய வேண்டும். அதே சமயம் சர்வதேச பிரச்சனையில் இருந்து மீனவர்களை முற்றிலுமாக விடுவிக்க வேண்டும். அதற்காக ஆழ்கடல் மீன்பிடித் தொழில் சம்பந்தமான ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும்.
- இன்காய்ஸ் மீன்வள மதிப்பீடு நிறுவனம் மீன் வளம் அதிகம் காணப்படும் பகுதிகளை முழுமையாக ஆய்வு செய்து புதுச்சேரி மின்வளத் துறைக்கு வழங்க வேண்டும். அதிகம் விலையுள்ள ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் குறைந்த முதலீட்டில் இளைஞர்களுக்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
- மேலும், கடல்சார் மீன்வளத்தை போலவே உள்நாட்டு மீன்பிடித் தொழிலையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசின் நிறுவனம் மூலமாக காரைக்கால் மீனவர்களுக்கு நண்டு வளர்ப்பு குறித்து அளிக்கப்படும் பயிற்சியை மீனவர்கள் மத்தியில் பிரபலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- உள்நாட்டிலுள்ள ஏரி, குளங்கள் ஆகியவற்றில் மீன்வளத்தை பெருக்கி அதை மீனவர்கள் முழுமையாக பராமரிக்க தேவையான உதவிகளை செய்து கொடுக்க வேண்டும். அதற்கான செயல் திட்டங்களை வகுக்க வேண்டும்.
- வரும் காலங்களில் மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் நீண்ட கால திட்டங்களை குறிப்பாக, ஆழ்கடல் மீன் பிடித் தொழில், மதிப்பு கூட்டப்பட்ட மீன் வளம், ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்கள் ஆகியவற்றை வகுத்து அவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனைத்து மத்திய அரசு நிறுவனங்களும் ஒன்று இணைந்து ஒரு கூட்டுக் குழுவை உருவாக்கி அதன் மூலமாக அடிப்படை தகவல்கள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை புதுச்சேரி மின்வளத் துறைக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- மீன் வள மேம்பாடு குறித்த புதிய கொள்கையை உருவாக்க வேண்டும். அதன் மூலமாக மீனவர்களின் வாழ்வில் பெரிய அளவிலான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.